# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

Vol: 01 | Issue: 357 | 4 Pages | 19.7.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur

மலர்: 01 | இதழ்: 357 | 4 பக்கங்கள் | 19.7.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர்


## தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் அருகே நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி: முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

தஞ்சாவூர், ஜூலை 19

தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் அருகே நிகழ்ந்த சாலை விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நிதியுதவி அறிவித்துள்ளார். இது குறித்து முதல்வர் வெளியிட்டுள்ள அறிக்கையில், தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், வளம்பக்குடி அருகில் இன்று (17.07.2024) காலை சுமார் 7.00 மணியளவில் கந்தர்வகோட்டையில் இருந்து சமயபுரம் கோவிலுக்கு பாதயாத்திரையாக சென்றுகொண்டிருந்தவர்கள் மீது எதிர்பாராதவிதமாக ஈச்சர் வாகனம் மோதிய விபத்தில் புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டம், கல்லாக்கோட்டை ஊராட்சி, கண்ணுகுடிபட்டியைச் சேர்ந்த முத்துசாமி (வயது 60) த/பெ.சின்னையன், ராணி (வயது 37) க/பெ. முருகன், மோகனாம்பாள் (வயது 27) க/பெ. ரமேஷ் மற்றும் மீனா (வயது 26) க/பெ. கார்த்திக் ஆகிய நான்கு நபர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும், இவ்விபத்தில் தனலட்சுமி (வயது 36) க/பெ. செல்வராஜ் என்பவர் பலத்த காயமடைந்து சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமும்




வேதனையும் அடைந்தேன். இவ்விபத்தில், பலத்த காயமடைந்து தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் சங்கீதா க/பெ.கவியரசன் என்பவருக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க உத்தரவிட்டுள்ளேன். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கும், அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா இரண்டு இலட்சம் ரூபாயும், காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருபவருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறுகுறிப்பிட்டுள்ளார்.

## காவிரி நீர் விவகாரம்: உடனடியாக நடவடிக்கை எடுத்து விவசாயத்தைப் பாதுகாக்க வேண்டும்: தமிழக அரசுக்கு ஜி.கே.வாசன் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 19

காவிரி நீர் விவகாரம் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுத்து விவசாயத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்; தமிழக அரசு, காவிரி நீரைப் பெறுவதில் உச்சநீதிமன்றத்தை நாடி, சட்டநடவடிக்கை எடுப்பது காலம் தாழ்ந்த முடிவு என்றாலும் ஏற்கனவே ஓர் அமைச்சரவைக்குழுவை கர்நாடகாவுக்கு அனுப்பி காவிரி நீரைப் பெற முயற்சித்திருக்க வேண்டும். தமிழக அரசு காலத்தே சட்டநடவடிக்கை உள்ளிட்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கையை மேற்கொண்டு கர்நாடகாவில் இருந்து தமிழகத்திற்கு உரிய காவிரி நீரை பெற்றிருக்க வேண்டும்.

காவிரி நீர் சம்பந்தமாக தமிழக சட்டமன்ற கட்சித் தலைவர்களின் இன்றையக் கூட்டத்தில் உச்சநீதிமன்றத்தை நாடி, சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. இனிமேலும் காலம் தாழ்த்தாமல் சட்டநடவடிக்கையின் மூலம் காவிரி நீரைப் பெற வேண்டும். கடந்த ஆண்டில் உச்சநீதிமன்றத்தை நாடித்தான் நீரைப் பெற்றோம் என்று தெரிவிக்கும் தமிழக அரசு காவிரி நீருக்காக கர்நாடக அரசிடம் நேரிடையாக சென்று முறையிட்டிருக்க வேண்டும். அதாவது கடந்த ஆண்டு உச்சநீதிமன்றத்தின் மூலம் காவிரி நீரைப் பெற்ற பிறகு தொடர்ந்து தமிழகத்துக்கு அளவீட்டின்படி திறந்து விட வேண்டிய தண்ணீரை கர்நாடக அரசு திறந்து விட மறுத்தது. மேலும்



தீர்மானம் நிறைவேற்றி உச்சநீதிமன்றம் சென்று காவிரி நீரைப் பெற முயற்சிக்கிறீர்கள். கடந்த ஓராண்டு காலமாக தமிழகத்திற்கு உரிய காவிரி நீர் காலத்தே கிடைக்காத போது, ஓர் அமைச்சரவைக்குழுவை கர்நாடகாவுக்கு அனுப்பி காவிரி நீரைப் பெற்றிருக்க வேண்டும்.

காவிரி நீர் கிடைக்காமல் குறுவை சாகுபடி பொய்த்து, குடிநீருக்கும் போதிய தண்ணீர் கிடைக்காமல் பாதிக்கப்பட்ட பிறகு மீண்டும் உச்சநீதிமன்றம் செல்ல இருப்பது காலம் தாழ்ந்தது என்றாலும் காவிரி நீர் சம்பந்தமாக கர்நாடகாவுக்கு ஓர் அமைச்சரவைக்குழுவை அனுப்பி பேச்சுவார்த்தை நடத்தி காவிரி நீரைப்பெற்றிருக்கலாம். எனவே தமிழக அரசே, காவிரி நீர் விவகாரம் தொடர்பாக காலம் தாழ்ந்து நடவடிக்கைகளை எடுப்பதற்கு பதிலாக உடனடி நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து தமிழக உரிமையை நிலைநாட்டி, விவசாயத்தைப் பாதுகாக்க வேண்டும் என்று தமிழ் மாநில காங்கிரஸ் சார்பில் வலியுறுத்துகிறேன். இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

## ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 22 ஆயிரம் கன அடியாக நீடிப்பு குளிக்க, பரிசல் இயக்க தடை



தருமபுரி, ஜூலை 19

கர்நாடகா அணைகளில் இருந்து திறக்கப்பட்ட நீரால் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து 22 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடகா, கேரளா மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து உள்ளதால் காவிரி நீர் பிடிப்பு பகுதிகளான குடகு, வயநாடு உள்ளிட்ட பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது.

கர்நாடகா அணைகளில் இருந்து வெளியேற்றப்பட்ட உபரி நீர் நேற்று மாலை நேரத்தில் இருந்து கர்நாடகாதமிழக எல்லையான பிலிகுண்டுலு பகுதிக்கு வரத்தொடங்கியது. இதனைத்தொடர்ந்து பிலிகுண்டுலு பகுதி வழியாக தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரிக்க தொடங்கியதால் கடந்த இரு தினங்களுக்கு முன்பு வினாடிக்கு 5 ஆயிரம் கனஅடியாக வந்து கொண்டிருந்தது.

இந்த நிலையில் கபினி, கே.ஆர்.எஸ். ஆகிய அணைகளில் இருந்து வினாடிக்கு 20 ஆயிரம் கனஅடிக்கு மேல் நீர் திறக்கப்பட்டதால் ஒனேக்கல்லுக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வினாடிக்கு 21 ஆயிரம் கனஅடியாக அதிகரித்த நீர்வரத்து இன்று காலை 8 மணி நிலவரப்படி மேலும் அதிகரித்து வினாடிக்கு 22 ஆயிரம் கனஅடியாக உயர்ந்தது. இதனால் மெயின் அருவி, ஐந்தருவி, சினி பால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து செல்கின்றன. நீர்வரத்து அதிகரிப்பு காரணமாக சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி பரிசல் இயக்குவதற்கு மாவட்ட நிர்வாகம் தடைவிதிக்கப்பட்ட இந்நிலையில் இன்று நீர்வரத்து 22 ஆயிரம் கனஅடி அளவில் அதிகரித்து வந்து கொண்டிருப்பதால், அருவிகளிலும் மற்றும் ஆற்றுப்பகுதியிலும் சுற்றுலா பயணிகள் குளிப்பதற்கு மாவட்ட நிர்வாகம் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சுற்றுலா பயணிகள்பரிசலில்செல்லமுடியாமல், அருவிகளில் குளிக்க முடியாமலும் ஏமாற்றுத்துடன் திரும்பி சென்றனர்.

கர்நாடகா அணைகளில் இருந்து தொடர்ந்து தண்ணீர் திறப்பு அதிகரித்து உள்ளதால், காவிரி ஆற்றிற்கு வரும் நீர் வரத்தை தமிழககர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

## காதி ஷோரூம்களில் தற்போது ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக உயர்நீதிமன்றம் வேதனை

சென்னை, ஜூலை 19

காதி ஷோரூம்களில் தற்போது ஆடம்பரப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதாக உயர்நீதிமன்றம் வேதனை தெரிவித்துள்ளது.

காதி, கிராம தொழில் வாரியத்தில் தச்சுத்தொழில் பிரிவில் பணியாற்றிய 2 பேரை வேறு பிரிவுக்கு மாற்றியதை எதிர்த்து காதி மற்றும் கிராம தொழில் வாரிய உதவி இயக்குநரின் உத்தரவுக்கு எதிராக தேவராஜ், சுரேஷ் ஆகியோர் வழக்கு தொடர்ந்தனர்.

தச்சர்களாக பணி நிரந்தரம் செய்யப்பட்ட 2 பேரையும் விற்பனை பிரிவுக்கு மாற்றிய உத்தரவை ரத்து செய்து ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.



2024ம் ஆண்டில் நடைபெற்ற பல்கலைக்கழக தேர்வில் தர்மபுரி கிருஷ்ணா பாராமெடிக்கல் கல்லூரி மாணவி தீபா 968/1000 மதிப்பெண் எடுத்து மாவட்ட அளவில் முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

## கடும் எதிர்ப்பு எழுந்ததை அடுத்து 100% கன்னடர்களுக்கு வேலை வழங்க வகை செய்யும் மசோதாவை நிறுத்தி வைத்தது கர்நாடக அரசு

பெங்களூரு, ஜூலை 19

கடும் எதிர்ப்பு எழுந்ததை அடுத்து கன்னடர்களுக்கு வேலை வழங்க வகை செய்யும் மசோதாவை கர்நாடக அரசு நிறுத்தி வைத்தது. சி மற்றும் டி பிரிவு வேலைகள் 100% கன்னடர்களுக்கே ஒதுக்க வேண்டும் என கர்நாடக அரசு மசோதா கொண்டு வந்தது. புதிய மசோதாவுக்கு தொழில் நிறுவனங்கள் தரப்பில் கடும் எதிர்ப்பு எழுந்த நிலையில் கர்நாடக அரசு பின்வாங்கியது. கர்நாடகாவில் உள்ள தனியார் நிறுவனங்களில் சி மற்றும் டி பிரிவு பணியிடங்களை 100 சதவீதம் கன்னட மக்களுக்கு கட்டாய இடஒதுக்கீடு வழங்கும் மசோதாவை அம்மாநில அரசு கொண்டு வந்தது. மேலும், தனியார் நிறுவனங்களில் பணியாளர்களை அமர்த்தும் போது நிர்வாகப் பணிகளில் 50 சதவீத இடஒதுக்கீடும், நிர்வாகம் அல்லாத பிற பணிகளில் 70 சதவீதமும் கன்னட மக்களை மட்டும் நியமிக்க வேண்டும் என்று மசோதாவில் குறிப்பிடப்பட்டது.

இந்த மசோதாவில் கர்நாடகா மாநிலத்தில் பிறந்து வளர்ந்தவர்கள் அல்லது 15 வருடங்களுக்குமேலாகஅம்மாநிலத்தில்வசித்துகன்னடத்தில் பேச,எழுத,படிக்கதெரிந்தவர்களுக்குஇந்தமசோதாவின்கீழ்இடஒதுக்கீடு வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தது. இந்தச் சட்டத்தை மீறும் தனியார் நிறுவனங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று மசோதாவில் தெரிவிக்கப்பட்டது. கர்நாடகா அரசு கொண்டு வந்திருந்த மசோதாவுக்கு ஐ.டி நிறுவனங்களின் சங்கமான மென்பொருள் மற்றும் சேவை நிறுவனங்களின் தேசிய சங்கம் (நாஸ்காம்) கண்டனம் தெரிவித்து மசோதாவை திரும்ப பெறுமாறு அம்மாநில அரசுக்கு கோரிக்கை வைத்திருந்தது. இந்நிலையில் கடும் எதிர்ப்பு கிளம்பிய நிலையில் கடும் எதிர்ப்பு எழுந்ததை அடுத்து கன்னடர்களுக்கு வேலை வழங்க வகை செய்யும் மசோதாவை கர்நாடக அரசு நிறுத்தி வைத்தது.

## இந்தியா குறைந்த முதலீட்டின் சுழற்சியில் சிக்கித் தவிக்கிறது ஜெய்ராம் ரமேஷ்



புதுடெல்லி, ஜூலை 19

நாடாளுமன்றத்தில் வரும் 23ந்தேதி மத்திய நிதி மந்திரி நிர்மலா சீதாராமன் 202425 மத்திய பட்ஜெட்டை தாக்கல் செய்ய உள்ளார். இந்த நிலையில், 2014 ம் ஆண்டு முதல் இந்தியா குறைந்த முதலீட்டின் சுழற்சியில் சிக்கித் தவிக்கிறது என காங்கிரஸ் பொதுச்செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"2014ம் ஆண்டு முதல் இந்தியா குறைந்த முதலீட்டின் சுழற்சியில் சிக்கித் தவிக்கிறது. இது ஒழுங்கற்ற கொள்கை மற்றும் மத்திய விசாரணை அமைப்புகளின் ரெய்டுகளால் ஆன ஆட்சியால் ஏற்பட்ட நிலையாகும்.

குறைந்த முதலீட்டு நிலைகள் காரணமாக நடுத்தர மற்றும் நீண்ட கால மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதங்கள் குறைகின்றன. இது ஊதியங்கள் மற்றும் நுகர்வு வளர்ச்சியைக் குறைக்கிறது.

முதலீட்டின் மிகப்பெரிய அங்கமான 'தனியார் உள்நாட்டு முதலீடு' 2014 முதல் மந்தநிலையில் உள்ளது. இது மன்மோகன் சிங்கின் ஆட்சிக் காலத்தில் மொத்த உள்நாட்டு உற்பத்தி வரம்பில் 25 முதல் 30 சதவீதமாக இருந்தது. ஆனால் தற்போது இது மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வரம்பில் 20 முதல் 25 சதவீதமாக உள்ளது.

2016ம் ஆண்டு முதல், உலகெங்கிலும் உள்ள பல தேசிய நிறுவனங்கள் சீனாவிலிருந்து விலகி மற்ற வளரும் நாடுகளில் முதலீடு செய்ய தொடங்கின. இந்தியா, சரியான நேரத்தில் சரியான இடத்தில் இருந்தது. ஆனால் அந்நிய நேரடி முதலீட்டைப் பெறுவதற்கும், உற்பத்தி மற்றும் ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரமாக மாறுவதற்குமான வாய்ப்பு வீணடிக்கப்பட்டுள்ளது.

வங்காளதேசம் மற்றும் வியட்நாம் போன்ற நாடுகள் நன்மைகளை பெற்றுள்ளன. இந்தியாவிற்கான தேவை என்பது விளிம்புநிலை கொள்கை அல்ல, மாறாக அரசியல் பொருளாதாரத்திற்கான புதிய, தாராளமயமாக்கப்பட்ட அணுகுமுறையே ஆகும்."

இவ்வாறு ஜெய்ராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

## சத்தீஷ்கார்: பாதுகாப்புப்படையினர் நடத்திய என்கவுண்ட்டரில் 12 நக்சலைட்டுகள் சுட்டுக்கொலை



ராய்ப்பூர், ஜூலை 19

சத்தீஸ்கர், மராட்டியம், ஜார்க்கண்ட் போன்ற மாநிலங்களில் நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளின் ஆதிக்கம் அதிகமாக உள்ளது. இந்த நக்சலைட்டுகள், மாவோயிஸ்டுகளை ஒடுக்கும் நடவடிக்கையில் மாநில சிறப்பு தனிப்படை போலீசாருடன் இணைந்து மத்திய ரிசர்வ் போலீசாரும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில், சத்தீஷ்கார் மாநிலம் கட்சிரோலி மாவட்டம் வன்டொலி கிராமம் அருகே உள்ள வனப்பகுதியில் நக்சலைட்டுகள் பதுங்கி இருப்பதாகபாதுகாப்புப்படையினர்மற்றும்மாவட்டரிசர்வ்போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இந்த பகுதி மராட்டிய மாநில எல்லையோரம் அமைந்துள்ளது.

இதையடுத்து, பாதுகாப்புப்படையினர் இன்று வனப்பகுதியில் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர். அப்போது, வனப்பகுதியில் பதுங்கி இருந்த நக்சலைட்டுகள், பாதுகாப்புப்படையினரை நோக்கி சரமாரியாக துப்பாக்கியால் சுட்டனர். உடனடியாக சுதாரித்துக்கொண்ட பாதுகாப்புப்படையினர் பதிலடி துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

பாதுகாப்புப்படையினர் நடத்திய தாக்குதலில் 12 நக்சலைட்டுகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்த என்கவுண்ட்டர் சம்பவத்தில் பாதுகாப்புப்படையை சேர்ந்த 2 வீரர்கள் காயமடைந்தனர். அதேவேளை, என்கவுண்ட்டர் நடந்த இடத்தில் துப்பாக்கிகள், வெடிபொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

# கருப்பு பட்டை பெற்ற மாணவர்களுக்கு பாராட்டு விழா



திருத்துறைப்பூண்டி ஜூலை 19

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி முத்துாஸ் கராத்தே மற்றும் ஸ்போர்ட்ஸ் அகாடமியில் கராத்தே பயிற்சி பெற்ற மாணவ மாணவிகளுக்கு கருப்பு பட்டை வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் சுமார் 49 மாணவ மாணவிகள் திருத்துறை ப்பூண்டி, வேதாரணியம், மன்னார்குடி, கொளப்பாடு, தூத்துக்குடி ஆகிய இடங்களிலிருந்து வந்து கலந்து கொண்டனர் இந்த விழாவினை வழக்கறிஞர் சிவசுப்பிரமணியன் தலைமை வகித்தார்.

முத்துாஸ் கராத்தே நிறுவனர் முத்துக்குமரன் வரவேற்புரை ஆற்றினார். உன்னால் முடியும் தம்பி நிறுவனர் கோவிந்தராஜ், விக்டரி மேல்நிலைப் பள்ளி தாளாளர் ராமலிங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கருப்புபட்டை பெற்ற மாணவ மாணவிகளை திருத்துறைப்பூண்டி தூய அந்தோணியார் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தாளாளர் வின்சென்ட் ஆரோக்கியராஜ் வாழ்த்தி சிறப்புரையாற்றியும் கருப்பு பட்டை மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கியும் சிறப்பித்தார் .பள்ளங்கோவில் ஜான் டி பிரிட்டோ உயர்நிலைப் பள்ளி தாளாளர் அமிர்தராஜ் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு நினைவு பரிசு வழங்கி சிறப்பித்தார். சிறப்பு பயிற்சியாளர் சுதாகர் மாணவர்களுக்கு கராத்தே கருப்பு பட்டைக்கான சிறப்பு அறிவுரைகளை வழங்கினார். ராஜ மணிகண்டன், ராமு , ஜெய் உல் ஹக்,சக்தி ஆகியோர் மாணவர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி அளித்தனர். இவ்விழாவினை கார்த்தி ,வெற்றி, அன்பு குமரன், அருள்ராஜ் ,ஸ்ரீராம் ஹரிஹரன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். விழாவின் முடிவில் அந்தோணி மைக்கேல் சிலுவை நன்றியுரை கூறினார்.

# ஆம்ஸ்ட்ராங் கொலை செய்யப்பட்ட வழக்கில் மேலும் 2 பேர் கைது: தீவிர விசாரணை நடத்தும் காவல்துறை

சென்னை, ஜூலை 19

ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் மேலும் 2 பேரை கைது செய்தது. கொலை தொடர்பாக பெண் வழக்கறிஞர் மலர்க்கொடி, ஹரிஹரன் ஆகியோரை போலீசார் கைது செய்தனர். ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் இதுவரை 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்; பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் ஜூலை 5ல் படுகொலை செய்யப்பட்டார்.

பகுஜன் சமாஜ் கட்சியின் மாநிலத் தலைவராக இருந்த ஆம்ஸ்ட்ராங் கடந்த ஜூலை 5ஆம் தேதி சென்னை பெரம்பூரில் கொலை செய்யப்பட்டார். இத வழக்கு தொடர்பாக கொலை செய்யப்பட்ட ரவுடி ஆற்காடு சுரேஷின் தம்பியான பொன்னை பாலு , ராமு, திருவேங்கிடம், திருமலை, செல்வராஜ், மணிவண்ணன், கோகுல், சக்தி, சந்தோஷ், அருள், சிவசக்தி உள்ளிட்ட 11 பேர் கைது செய்யப்பட்டனர். இந்த நிலையில் காவலர்களை தாக்கிவிட்டு தம்பிக்க முயன்றதாககூறி திருவேங்கிடம் என்பவர் கடந்த ஞாயிற்றுக் கிழமை அன்று போலீசாரால் என்கவுண்டர் செய்யப்பட்டார்.



இந்த நிலையில் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு தொடர்பாக பிரபல தாதாவின் மனைவியும் வழக்கறிஞருமான மலர் கொடி மற்றும் ஹரிஹரன் ஆகியோரை செம்பியம் போலீசார் கைது செய்து உள்ளனர். கைது செய்யப்பட்ட 6 பேரிடம் காவல்துறையினர் இன்றைய தினம் விசாரணை நடத்தினர். இவர்களுக்கு இடையே நடைபெற்ற பணப்பரிவர்தனை குறித்தும் காவல்துறை தீவிர விசாரணை நடத்தி வருவதாக கூறப்படுகின்றது.

# சமயபுரத்துக்கு பாதயாத்திரையாக சென்ற பக்தர்கள் கூட்டத்தில் வேன் புகுந்து 4 பெண்கள் உள்பட 5 பேர் பலி: தஞ்சாவூர் அருகே சோகம்



தஞ்சாவூர், ஜூலை 19

தஞ்சாவூர் அருகே சமயபுரம் கோயிலுக்கு பாதயாத்திரை சென்ற பக்தர்கள் கூட்டத்தில் சரக்கு வேன் புகுந்ததில் 4 பெண்கள் உள்பட 5 பேர் பலியாகினர். ஆடிமாத பிறப்பையொட்டி புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வ கோட்டை அருகே கல்லாக்கோட்டை ஊராட்சி கண்ணுக்குடிபட்டியை சேர்ந்த ஆண்கள் மற்றும் பெண்கள் என 65 பேர், திருச்சி மாவட்டம் சமயபுரம் கோயிலில் சாமி தரிசனம் செய்வதற்காக நேற்று முன்தினம் மாலை பாதயாத்திரையாக புறப்பட்டனர்.

இவர்கள் பத்து பத்து பேர் குழுவாக தஞ்சாவூர் மாவட்டம் வலம்பக்குடி கிராமத்தில்திருச்சிதஞ்சை தேசிய நெடுஞ்சாலையில் சர்வீஸ் சாலையோரமாக நடந்து சென்று கொண்டிருந்தனர். அப்போது கரூரில் இருந்து அரிசி லோடு ஏற்றி வந்த சரக்கு வேன், தஞ்சை குடோனில் இறக்கி விட்டு மீண்டும் காலை 6.40 மணியளவில் கரூர் சென்று கொண்டிருந்தது. திடீரென டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து நடந்து சென்ற பாதயாத்திரை பக்தர்கள் கூட்டத்திற்குள் வேன் புகுந்தது. இதில், கண்ணுக்குடிபட்டியை சேர்ந்த முத்துசாமி(60),மீனா(26), ராணி (37), மோகனாம்பாள்(45) ஆகியோர் சம்பவ இடத்திலேயே இறந்தனர். இதில் படுகாயடைந்த தனலட்சுமி(28), சங்கீதா(30) ஆகியோர் தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு சிகிச்சை பலனின்றி தனலட்சுமி இறந்தார். சங்கீதாவுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

தகவலறிந்த எஸ்பி ஆஷிஷ் ராவத், டிஎஸ்பிக்கள் நித்யா, ராமதாஸ் மற்றும் செங்கிப்பட்டி போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். பின்னர் போலீசார், 4 பேரின் உடல்களை மீட்டு பிரேத பரிசோதனைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது குறித்து செங்கிப்பட்டி போலீசார் வழக்கு பதிந்து கரூரை சேர்ந்த வேன் டிரைவர் சவுந்தரராஜனை(38) கைது செய்தனர். சமயபுரம் கோயிலுக்கு பாதயாத்திரை சென்ற 5 பேர் விபத்தில் பலியானதால் கண்ணுக்குடிபட்டி கிராமமே சோகத்தில் மூழ்கியுள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலி வெளியிட்டுள்ள அறிக்கை: சமயபுரம் கோயிலுக்கு பாதயாத்திரையாக சென்று கொண்டிருந்தவர்கள் மீது எதிர்பாரா தவிதமாக வாகனம் மோதிய விபத்தில் புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை வட்டம், கல்லாக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த முத்துசாமி (60), ராணி (37), மோகனாம்பாள் (27) மற்றும் மீனா(26) ஆகிய 4 நபர்கள் சம்பவ இடத்திலேயும், தனலட்சுமி (36) மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயும் உயிரிழந்தார்கள் என்ற துயரமான செய்தியை கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன். விபத்தில், காயமடைந்து தஞ்சாவூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை பெறும் சங்கீதாவுக்கு சிறப்பு சிகிச்சை அளிக்க உத்தரவிட்டுள்ளேன். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.2 லட்சமும், காயமடைந்தவருக்கு ரூ.1 லட்சமும் வழங்க உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# ஆர்.கே.பேட்டை அருகே சாலையோர தரைக்கிணறுக்கு தடுப்பு வேலி: கிராம மக்கள் வலியுறுத்தல்



ஆர்.கே.பேட்டை, ஜூலை 19

ஆர்.கே.பேட்டை அருகே சாலையை ஒட்டியுள்ள பாழடைந்த தரைக் கிணற்றினால் அதிகளவு வாகன விபத்துகள் நடைபெற்று வருகிறது. இக்கிணற்றை சுற்றிலும் தடுப்பு வேலி அமைத்து தரவேண்டும் என்று கிராம மக்கள் வலியுறுத்துகின்றனர். திருவள்ளூர் மாவட்டம், ஆர்.கே.பேட்டை ஒன்றியத்தில் அடங்கிய காண்டாபுரம் கிராமத்தில் இருந்து ராஜா நகரம் மேற்கு, கிழக்கு பகுதிகளுக்கு செல்லும் சாலையோரமாக ஏராளமான விவசாய நிலங்கள் உள்ளன. மேலும், ராஜா நகர கிராமங்களில் 50க்கும் மேற்பட்ட விவசாய குடும்பங்கள் வசிக்கின்றனர்.

இச்சாலையில் இதுவரை மின்விளக்கு வசதி ஏற்படுத்தி தரப்படவில்லை. மேலும், காண்டாபுரத்தில் இருந்து ராஜா நகரம் கிராமங்களுக்கு செல்லும் சாலையை ஒட்டி, திறந்தவெளியில் பாழடைந்த தரைக்கிணறு உள்ளது. இதை சுற்றிலும் ஏராளமான முட்புதர் காடுகள் வளர்ந்துள்ளன.

இச்சாலை வழியே இரவு நேரங்களில் அவசர ஆபத்துக்கு வாகனங்களில் வேகமாக செல்பவர்கள், எதிர்வரும் வாகனங்களுக்கு வழிவிடும் வகையில் திரும்பும்போது, புதர்களுக்கு இடையே உள்ள பாழடைந்த தரைக்கிணற்றுக்குள் விழுந்து படுகாயம் அடைந்து வருகின்றனர்.

இதனால் சாலையோர கிணற்றினால் வாகன விபத்துகளும் உயிரிழப்புகளும் அதிகரிக்கும் அபாயநிலை உள்ளது. எனவே, ஆர்.கே.பேட்டை ஒன்றியத்தில் சாலையோரம் அபாயகர நிலையில் உள்ள தரைக்கிணற்றை சுற்றிலும் தடுப்பு வேலி அமைப்பதற்கும், அங்கு மின்விளக்கு வசதி ஏற்படுத்தி தருவதற்கும் மாவட்ட கலெக்டர் மற்றும் ஒன்றிய அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ராஜாநகர கிராம மக்கள் வலியுறுத்துகின்றனர்.

# ரூ.100 கோடி நில அபகரிப்பு தொடர்பான எம்.ஆர்.விஜயபாஸ்கர் வழக்கில் கைதான காவல் ஆய்வாளர் பிருத்விராஜுக்கு 15 நாள் நீதிமன்ற காவல்



கரூர், ஜூலை 19

ரூ.100 கோடி நில அபகரிப்பு தொடர்பான எம்.ஆர்.விஜயபாஸ்கர் வழக்கில் கைதான காவல் ஆய்வாளர்பிருத்விராஜுக்கு 15 நாள் நீதிமன்ற காவலில் சேலம் மத்திய சிறையில் அடைக்ககரூர்குற்றவியல் நடுவர் நீதிமன்ற நீதிபதி பரத்குமார் உத்தரவிட்டுள்ளார். காவல் ஆய்வாளர் பிரித்விராஜை ஜூலை 31ம் தேதி மீண்டும் கரூர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நீதிபதி உத்தரவிட்டார்.

# ஈரோடு கலெக்டரின் மனைவி நீலகிரி கலெக்டரானார்



ஊட்டி, ஜூலை 19

ஈரோடு கலெக்டரின் மனைவி நீலகிரி மாவட்ட கலெக்டராக பொறுப்பேற்றுள்ளார். ஈரோடு மாவட்ட கலெக்டராக ராஜகோபால் சுன்கரா பணியாற்றி வருகிறார். இவரது மனைவி லட்சுமி பாவ்யா தன்னீரு. இவர் ஈரோடு வணிக வரித்துறை இணை ஆணையராக பணியாற்றி வந்தார். தற்போது அவர் நீலகிரி மாவட்ட கலெக்டராக நியமனம் செய்யப்பட்டு நேற்று பொறுப்பேற்றார். நீலகிரி மாவட்டத்தின் 116வது கலெக்டரும், 7வது பெண் கலெக்டரும் ஆவார். இவர் கடந்த 2015ல் ஐஏஎஸ் தேர்ச்சி பெற்றவர். கலெக்டராக பதவி ஏற்றபின் லக்ஷ்மி பவ்யா தன்னீரு நிருபர்களிடம் கூறியதாவது: 156 ஆண்டுகள் பழமை வாய்ந்த நீலகிரி மாவட்டத்தின் கலெக்டராக பொறுப்பேற்றதில் மகிழ்ச்சி அடைகிறேன். இதற்கு வாய்ப்பு அளித்த தமிழ்நாடு முதல்வருக்கு நன்றி. மக்களின் பிரச்னைகள் அனைத்தையும் அறிந்து கடைக்கோடி மக்களுக்கும் அனைத்து அரசின் நலத்திட்டங்களும் சென்றடைய நடவடிக்கை எடுப்பேன். இவ்வாறு லக்ஷ்மி பவ்யா தன்னீரு கூறினார்.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 21,520 கனஅடியாக அதிகரிப்பு



சேலம், ஜூலை 19

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 20,910 கனஅடியில் இருந்து தற்போது 21,520 கன அடியாக அதிகரித்துள்ளது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 47.78 அடி; நீர் இருப்பு 16.443 டி.எம்.சி.யாக உள்ளது. கர்நாடக அணைகளில் இருந்து காவிரியில் உபரி நீர் வெளியேற்றப்பட்டு வரும் நிலையில் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

# ஆடி மாதத்தில் தொடங்கினார் அதிமுக கொடியுடன் சசிகலா சுற்றுப்பயணம்



தென்காசி, ஜூலை 19

ஆடி மாதத்தில் ஆன்மீக பயணம்தான் செல்வார்கள். ஆனால் ஆடி முதல் நாளான நேற்று அதிமுகவை ஒருங்கிணைப்பதற்கா சசிகலா தனது அரசியல் சுற்றுப்பயணத்தை தென்காசி மாவட்டம், குற்றாலம் காசிமேஜர்புரத்திலிருந்து அதிமுக கொடி கட்டிய வேனில் தொடங்கினார். தொடர்ந்து இலஞ்சி, தென்காசி புதிய பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் திரண்டு இருந்த தொண்டர்கள் மற்றும் கட்சியினர் மத்தியில் வேனில் இருந்தபடி அவர் பேசுகையில், 'எம்ஜிஆர் கட்சி துவங்கியது ஏழை எளிய மக்களுக்காக தான். பிறகு ஜெயலலிதாவும் எம்ஜிஆர் வழியில் ஆட்சி செய்தார். யாரை வேண்டுமானாலும் ஏமாற்றலாம், என்கிட்ட நடக்காது. தொண்டர்கள் ஒற்றுமையாக இருந்து 2026ல் அதிமுக ஆட்சி உருவாக பாடுபடவேண்டும்.மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும். தாய் வழி வந்த தங்கங்கள் எல்லாம் ஓர் வழி நின்று நேர்வழி சென்றால் நாளை நமதே' என்றார். சசிகலாவின் நிகழ்ச்சி முழுவதும் ஆங்காங்கே அதிமுக கொடி கட்டப்பட்டிருந்தது.

# நெற்குன்றம் திருவாலீஸ்வரர் திரிபுரசுந்தரி கோயிலுக்கு அறநிலையத் துறை தக்கார் நியமனம் செல்லும்: சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, ஜூலை 19

சென்னையில் உள்ள 700 ஆண்டுகள் பழமையான கோயிலுக்கு தக்கார் நியமித்த இந்து அறநிலைய துறையின் உத்தரவு செல்லும் என்று உத்தரவிட்டுள்ள சென்னை உயர் நீதிமன்றம் இந்த கோயிலை எப்படி கிரயம் செய்ய முடியும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளது. சென்னையில் நெற்குன்றம் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள திருவாலீஸ்வரர் திரிபுரசுந்தரி கோயிலுக்கு இந்து அறநிலைய துறையால் நியமிக்கப்பட்ட தக்கார் நியமனத்தை எதிர்த்து ரவி கே.விஸ்வநாதன் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

அவர் தாக்கல் செய்த மனுவில், இந்த கோயில் மற்றும் அதன் சொத்துக்கள் அனைத்தும் தனது தாத்தா திரு நீலமேகம் பிள்ளை என்பவரால் கடந்த 1941ம் ஆண்டு கிரயப்பத்திரம் மூலம் எங்களுக்கு தரப்பட்டுள்ளது. இதனால் கோயில் தங்கள் குடும்பத்திற்கு சொந்தமானது.

அறநிலையத் துறை இக்கோயிலில் நிர்வாகம் செலுத்த முடியாது என்று கூறப்பட்டிருந்து. இந்த வழக்கு நீதிபதி பவானி சுப்பராயன் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது அறநிலையத்துறை தரப்பில் சிறப்பு அரசு வழக்கறிஞர் அருண் நடராஜன் ஆஜராகி, அந்த கோயிலின் செயல் அலுவலரின் பதில் மனுவை தாக்கல் செய்தார்.

அதில், நெற்குன்றத்தில் உள்ள திருவாலீஸ்வரர் திரிபுரசுந்தரி கோயில் 700 ஆண்டுகள் பழமையானவை என்பது அங்கு கிடைத்த கல்வெட்டுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

இதை தொல்லியல் துறை ஆய்வாளர் ராமமூர்த்தி உறுதி செய்துள்ளார். இந்து அறநிலைய சட்டப்படி 700 ஆண்டுகள் பழமையான கோயிலை கிரயப்பத்திரம் மூலமாக வாங்கவோ விற்கவோ முடியாது. தாத்தா பேரனுக்கு எவ்வாறு கிரயப்பத்திரம் எழுதி வைத்தார் என்பது தொடர்பாக முறையான விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. இதை ஏற்றுக்கொண்ட நீதிபதி, திருவாலீஸ்வரர் திரிபுரசுந்தரி கோயிலுக்கு நியமிக்கப்பட்ட தக்கார் நியமனம் செல்லும் என்று உத்தரவிட்டு இந்த மனு மீதான விசாரணையை ஆக்ஸ்ட் 8ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.



தர்மபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம் சிவாடி ஊராட்சி நபார்டு திட்டத்தின் கீழ் பாகல அள்ளி முதல் முத்துப்பட்டி ஆஞ்சநேயர் கோவில் காட்டு சாலை வரை ரூ.4.81 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வந்த சாலை பணியினை கலெக்டர் சாந்தி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

# குளத்தில் நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்த மாணவர் நீரில் மூழ்கி உயிரிழப்பு




கன்னியாகுமரி, ஜூலை 19

கன்னியாகுமரி மாவட்டம் விஷ்ணுபுரம் பகுதியில் உள்ள ஆலமூடு குளத்தில் நண்பர்களுடன் குளித்துக் கொண்டிருந்த +2 மாணவரான பிபின் (17), ஆழமான பகுதிக்கு சென்றதில் நீரில் மூழ்கி உயிரிழந்தார். தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்த அவரின் உடலை மீட்டனர்.

# சென்னை புழல் அருகே சூரப்பட்டு பகுதியில் ரவுடி சேதுபதி துப்பாக்கி முனையில் கைது

சென்னை, ஜூலை 19

சென்னை புழல் அருகே சூரப்பட்டு பகுதியில் ரவுடி சேதுபதி என்பவரை துப்பாக்கி முனையில் தனிப்படை காவல் துறையினர் கைது செய்துள்ளனர். சோழவரம் காவல்நிலையத்தில் சரித்திர பதிவேடு குற்றவாளியாக உள்ளார் ரவுடி சேதுபதி. இவர்மீது 5 கொலை வழக்குகளும், கொலை முயற்சி உள்ளிட்ட 30க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் உள்ளது. கடந்த 6 மாதங்களுக்கு முன்பு கஞ்சா வழக்கில் இவர் தலைமறைவாகியிருந்தார். அதன் பின்னர் இவரை தனிப்படை காவல்துறையினர் தேடி வந்தனர். இந்த நிலையில், சென்னை காவல் ஆணையர் பதவி ஏற்ற பின்பு ரவுடிகளை ஒடுக்கும் விதமாக பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.



அதன் ஒரு பகுதியாக ஆவடி காவல் ஆணையருக்கு உட்பட்ட ரவுடிகளை ஒடுக்கக்கூடிய தனிப்படை காவல்துறையினர் சூரப்பட்டு ஏரிக்கரை பகுதியில் பதுங்கி இருந்த ரவுடி சேதுபதியை துப்பாக்கி முனையில் கைது செய்தனர். இவர் மீது மாதவரம், மீஞ்சூர், காட்டூர், புழல் உள்ளிட்ட பல்வேறு காவல் நிலையங்களில் கொள்ளை, வழிப்பறி, தொழிலதிபர்களை மிரட்டுதல் உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளது.

கடந்த ஆண்டு காவல் துறையினரால் என்கவுண்டர் செய்யப்பட்ட முத்து சரவணனுக்கு எதிர் தரப்பினராகவும் இருப்பதாக கூறப்படுகிறது. இந்த நிலையில் கைது செய்யப்பட்ட அவரிடம் தனிப்படை போலீசார் ரகசிய இடத்தில் விசாரணை நடத்திவருகின்றனர்.

# சென்னையில் வீட்டில் கஞ்சா பதுக்கி வைத்து விற்பனை செய்துவந்த பாஜக நிர்வாகி கைது

சென்னை, ஜூலை 19

சென்னையில் வீட்டில் கஞ்சா பதுக்கி வைத்து விற்பனை செய்து வந்த பா.ஜ.க. நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளார். பெரம்பூர் பி.என்.சி. மில் பாலம் அருகே கையில் பையுடன் வேகமாக சென்ற 2 பேரை தனிப்படை போலீசார் மடக்கிப் பிடித்து சோதனை செய்தனர். இருவரும் பையில் வைத்திருந்த 4 கிலோ கஞ்சாவை ஓட்டேரி போலீசார் பறிமுதல் செய்து விசாரணை நடத்தினர். பையில் கஞ்சா வைத்திருந்த பட்டாளம் பகுதியை சேர்ந்த



விஜய் (26), ரகு (44) ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர். பாஜக நிர்வாகி குணசேகரன் தங்களிடம் கஞ்சாவை கொடுத்து விற்கச் சொன்னதாக கைதான இருவரும் போலீசில் தகவல் தெரிவித்தனர். பாஜக நிர்வாகி குணசேகரன் வீட்டில் நடந்த சோதனையில் 4 கிலோ கஞ்சா மற்றும் எடை போடும் இயந்திரங்கள் பறிமுதல் செய்யபப்ட்டுள்ளது. புரசைவாக்கத்தை சேர்ந்த பாஜக வட சென்னைமேற்குமாவட்ட வர்த்தக அணி மாவட்ட செயலாளர் குணசேகரன் (40) கைது செய்யப்பட்டுள்ளார். பாஜக நிர்வாகி குணசேகரன், ஆந்திராவில் இருந்து கஞ்சாவை வாங்கி வந்து வீட்டில் பதுக்கி வைத்து, விஜய், ரகு மூலம் விற்றது அம்பலமாகியுள்ளது. பாஜக நிர்வாகி உட்பட 3 பேர் மீதும் போலீசார் வழக்குப்பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கில் முக்கிய 3 பேரை மீண்டும் காவலில் எடுத்து விசாரணை: செம்பியம் போலீசார் முடிவு

பெரம்பூர், ஜூலை 19

தமிழக பகுஜன்சமாஜ் கட்சி தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலைவழக்கில் கைது செய்யப்பட்டவர்களில் முக்கியமான பொன்னை பாலு, அருள் மற்றும் திருமலை ஆகிய 3 பேரையும் மீண்டும் 3 நாள் காவலில் எடுத்து விசாரிக்க செம்பியம் போலீசார் முடிவு செய்துள்ளனர். தமிழக பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் ஆம்ஸ்ட்ராங்கை கடந்த 5ம் தேதி இரவு மர்ம நபர்கள் சரமாரி வெட்டி படுகொலை செய்தனர். இது வரை கொலை தொடர்பான சிசிடிவி காமிரா காட்சிகளை வைத்தும், கடந்த ஆண்டு கொலை செய்யப்பட்ட ரவுடி ஆற்காடு சுரேஷின் தம்பி பொன்னை பாலு, திருவேங்கடம், திருமலை, அருள் என ஆம்ஸ்ட்ராங் கொலையில் தொடர்புடைய 11 பேரை கைது செய்துள்ளனர். மேலும், கைதான 11 பேரிடமும் செம்பியம் போலீசார் விசாரிக்க முடிவு செய்தனர். அதன் பேரில் எழும்பூர் நீதிமன்றத்தில் போலீசார் மனுத்




தாக்கல் செய்தனர்.

பின்னர் பாதுகாப்பு கருதி, பூந்தமல்லி கிளை சிறையில் இருந்த 11 பேரிடமும் வீடியோ கான்பரன்ஸ் மூலம் விசாரணை நடத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, கைதான 11 பேரையும் 5 நாள் போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க எழும்பூர் நீதிமன்றம் அனுமதியளித்தது. போலீஸ் காவலில் கைதான 11 பேரிடமும் ரகசிய இடத்தில் வைத்தும், கொலை தொடர்பான இடங்களிலும் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டனர். கடந்த சில நாட்களுக்கு முன் விசாரணையின்போது கைதானவர்களில் ஒருவரான ரவுடி திருவேங்கடம் தப்பியோட முயன்றபோது போலீசாரை தாக்கியதால், அவர் என்கவுன்டர் மூலம் சுட்டு கொல்லப்பட்டார். இதையடுத்து மீதமுள்ள 10 பேரிடமும் விசாரணை முடிந்து, நேற்று சென்னை எழும்பூர் நீதிமன்ற நீதிபதி தயாளன் முன்பு மீண்டும் போலீசார் ஆஜர்படுத்தினர். அவர்களை பூந்தமல்லி கிளை சிறையில் அடைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்நிலையில், ஆம்ஸ்ட்ராங் கொலைவழக்கில் முக்கிய நபர்களாக கருதப்படும் ரவுடி ஆற்காடு சுரேஷின் தம்பி பொன்னை பாலு, கொலைக்கு ஸ்கெட்ச் போட்டு கொடுத்த சரித்திர பதிவேடு ரவுடி திருமலை, வழக்கறிஞர் அருள் ஆகிய 3 பேரிடமும் கூடுதலாக விசாரிக்க வேண்டும். அவர்களிடம் வாக்குமூலம் பெறுவதற்கு கூடுதலாக 3 நாள் காவலில் எடுக்க செம்பியம் போலீசார் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

குறிப்பாக, கடந்த ஆண்டு ரவுடி ஆற்காடு சுரேஷ் கொலை செய்யப்பட்டதற்கு பழிவாங்கும் வகையில்தான் இக்கொலை நடைபெற்றதா என்பது குறித்து ஆதாரங்களை திரட்ட, கொலையில் சம்பந்தப்பட்ட முக்கியமான 3 பேரை மீண்டும் காவலில் எடுத்து விசாரிக்க உள்ளதாகவும், இது தொடர்பாக எழும்பூர் நீதிமன்றத்தில் புதிய மனு தாக்கல் செய்து, 3 நாள் காவலில் எடுக்க போலீஸ் தரப்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஏற்கெனவே போலீஸ் காவலில் எடுக்கப்பட்ட ரவுடி திருவேங்கடம் என்கவுன்டர் செய்யப்பட்ட நிலையில், மீண்டும் 3 பேருக்கு போலீஸ் காவல் வழங்கப்படுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது.

# கோவையில் இருந்து அபுதாபிக்கு ஆகஸ்ட்.10ம் தேதி முதல் விமான சேவை தொடக்கம்: இண்டிகோ நிறுவனம்

கோவை, ஜூலை 19

கோவையில் இருந்து சர்வதேச விமான இணைப்பை மேம்படுத்தும் வகையில், இன்டிகோ விமான நிறுவனம் அபுதாபிக்கு புதிய விமான சேவையை அறிமுகப்படுத்த உள்ளது. இந்திய விமானப் போக்குவரத்து இயக்குநரகத்தின் ஒப்புதலுக்கு உட்பட்டு, கோவை சர்வதேச விமான நிலையம் மற்றும் அபுதாபி சர்வதேச விமான நிலையம் இடையே வாரத்தில் மூன்று முறை விமானங்களை இயக்க இந் நி று வ ன ம் திட்டமிட்டுள்ளது. அட்டவணையின்படி காலை 7.30 மணிக்கு கோவையில் புறப்படும் இண்டிகோ விமானம் பிற்பகல் 11:30 மணிக்கு அபுதாபி சென்றடையும். அபுதாபியில் பிற்பகல் 1 மணிக்கு கிளம்பும் இண்டிகோ விமானம், மாலை 6.30 மணிக்கு கோவை விமான நிலையம் வந்தடையும் என்றும் தெரிவித்துள்ளது. இந்த சேவை கோவையில் இருந்து அபுதாபிக்கு ஆகஸ்ட்.10ம் தேதி முதல் தொடங்கப்படும் என இண்டிகோ நிறுவனம் தெரிவித்துள்ளது. துபாய், சிங்கப்பூருக்கு மட்டுமே இதுவரை சர்வதேச விமான சேவை இருந்த நிலையில் அபுதாபிக்கு சேவை ஆரம்பம் செய்யப்பட உள்ளது. இந்த புதிய பாதைகளின் அறிமுகம், இன்டிகோவின் சர்வதேச வலையமைப்பை விரிவுபடுத்துவதற்கான உறுதிப்பாட்டையும், இந்தியாவிற்கும் ஐக்கிய அரபு எமிரேட்ஸுக்கும் இடையேயான விமானப் பயணத்திற்கான வளர்ந்து வரும் தேவையை பூர்த்தி செய்வதையும் பிரதிபலிக்கிறது. மேலும் தென்னிந்தியாவின் முக்கியவிமானமையமாககோவையின் முக்கியத்துவம் அதிகரித்து வருவதையும் இது குறிக்கிறது.

# நாமக்கல்லில் இருந்து வெளிநாடுகளுக்கு முட்டை ஏற்றுமதி சரிவு



நாமக்கல், ஜூலை 19

அரபு நாடுகளில் கடும் வெப்பம் நிலவுவதால், முட்டை நுகர்வு குறைந்து, நாமக்கல்லில் இருந்து முட்டை ஏற்றுமதி சரிந்துள்ளது. வெளிநாடுகளுக்கு 70 சதவீத முட்டை ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதாக முட்டை ஏற்றுமதியாளர்கள்கவலை தெரிவித்துள்ளனர். நாமக்கலில் உள்ள பண்ணைகள் மூலம் நாள்தோறும் சுமார் 70 லட்சம் முட்டைகள் ஏற்றுமதி வெளிநாடுகளுக்கு செய்யப்படுகின்றன.

# உச்சநீதிமன்றம் தீர்ப்புகளை மதிக்காமல் தமிழ்நாட்டுக்கு தண்ணீர் தர மறுக்கும் கர்நாடக அரசுக்கு கி.வீரமணி கண்டனம்

சென்னை, ஜூலை 19

உச்சநீதிமன்றம் தீர்ப்புகளை மதிக்காமல் தமிழ்நாட்டுக்கு தண்ணீர் தர மறுக்கும் கர்நாடக அரசுக்கு திராவிடர் கழக தலைவர் கி.வீரமணி கண்டனம் தெரிவித்துள்ளார். “காவிரி நடுவர் மன்றம், உச்சநீதிமன்றம் தீர்ப்புகளுக்கு எதிராக கர்நாடக அரசு தமிழ்நாட்டுக்கு தண்ணீர் தர மறுப்பதா?. தமிழ்நாடு அனைத்துக் கட்சிக் கூட்ட தீர்மானங்கள் மிகச் சரியானவை மட்டுமல்ல; தேவையானவையும்கூட. தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் கூட்டத்தில் நிறைவேற்றிய மூன்று தீர்மானங்களும் முத்தானவை. வரும் 23ம் தேதி தஞ்சையில் திராவிடர் கழகம் நடத்தும் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு ஆதரவு தர வேண்டும்” என கி.வீரமணி தெரிவித்துள்ளார்.



# நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழையால் முல்லைப் பெரியாறு அணை நீர்மட்டம் 125 அடியை தாண்டியது

கூடலூர், ஜூலை 19

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்துவரும் மழையால், முல்லைப்பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் 121.05 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் இன்று காலை 125.10 அடியாக உயர்ந்து உள்ளது. 152 அடி உயரமுள்ள பெரியாறு அணையின் நீர் மட்டம்,

இன்று காலை நிலவரப்படி 125.10 அடி. அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 5,395 கன அடி. அணையில் இருந்து தமிழகத்துக்கு வினாடிக்கு 1,267 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்பு நீர் 3,640 மில்லியன் கனஅடி. 71 அடி உயரம் உள்ள வைகை அணையின் நீர்மட்டம் 52.36 அடி.



அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 1,671 கன அடி. அணையில் இருந்து வினாடிக்கு 869 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்பு நீர் 2,316 மில்லியன் கன அடி. 126.28 அடி உயரம் உள்ள சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 118.57 அடி. அணைக்கு நீர்வரத்து இல்லை. அணையில் இருந்து வினாடிக்கு 3 கனஅடி நீர் திறக்கப்பட்டுள்ளது. அணையின் இருப்பு நீர் 87.42 மில்லியன் கனஅடி. 57 அடி உயரம் உள்ள மஞ்சளாறு அணையின் நீர்மட்டம் 55 அடி. அணைக்கு நீர்வரத்து 46 கனஅடி. அணையில் இருந்து வினாடிக்கு 46 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. அணையின் இருப்பு நீர் 435.32 மில்லியன் கனஅடி.

# ஐகோர்ட் கிளையின் 20ம் ஆண்டு நிறைவு விழா; ஜூலை 20ம் தேதி மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெறுகிறது

மதுரை, ஜூலை 19

உயர்நீதிமன்ற மதுரைகிளையின் 20ம் ஆண்டு நிறைவு விழா ஜூலை 20ம் தேதி மதுரை தமுக்கம் மைதானத்தில் உள்ள உள் அரங்கில் நடைபெற உள்ளது. இவ்விழாவில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் மற்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் M.M. சுந்தரேஷ், விஸ்வநாதன், ஆர்.மகாதேவன், சூர்யகாந்த், B.R.கவாய் உள்ளிட்டோர் பங்கேற்க உள்ளனர்.



# கர்நாடகாவை போல் தமிழகத்தில் உள்ள தனியார் நிறுவனங்களில் தமிழர்களுக்கு 80% பணிகளுக்கான சட்டம் இயற்ற அன்புமணி வலியுறுத்தல்

பெங்களூரு, ஜூலை 19

கர்நாடகத்தில் தனியார் வேலைவாய்ப்பில் 100% கன்னடருக்கே ஒதுக்கீடு செய்யப்படுவதாக சட்டம் இயற்றப்பட்டது. தமிழகத்தில் சட்டமியற்ற திமுக அரசு தயங்குவது ஏன்? என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில், “கர்நாடகத்தில் தனியார் நிறுவனங்களில் உள்ள சி மற்றும் டி பிரிவு பணியிடங்கள் அனைத்தையும் முழுக்க முழுக்க கன்னடர்களைக் கொண்டு தான் நிரப்ப வேண்டும் என்ற சட்ட முன்வரைவுக்கு அம்மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இந்த முன்வரைவு நாளை அம்மாநில சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்டு நிறைவேற்றப்படவுள்ள நிலையில், தமிழ்நாட்டில் இத்தகைய சட்டத்தை கொண்டுவருவாதக் கூறி வெற்றி பெற்ற திமுக அரசு, அதை நிறைவேற்ற இதுவரை நடவடிக்கை எடுக்காதது கண்டிக்கத்தக்கது.

கர்நாடகத் தலைநகர் பெங்களூருவில் முதலமைச்சர் சித்தராமையா தலைமையில் நேற்று நடைபெற்ற மாநில அமைச்சரவைக் கூட்டத்தில், ‘‘கர்நாடக மாநில தொழிற்சாலைகள், ஆலைகள் மற்றும் பிற அமைப்புகளில் உள்ளூர் மக்களுக்கு வேலை வழங்குவதற்கான சட்ட முன்வரைவு’’க்கு ஒருமனதாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இந்த



சட்ட முன்வரைவு நிறைவேற்றப்பட்டால், கர்நாடகத்தில் செயல்பட்டு வரும் தனியார் தொழில் மற்றும் வணிக நிறுவனங்களில் உள்ள மேலாண்மை பணிகளில் 50 விழுக்காடும், மேலாண்மை அல்லாத பணிகளில் 75 விழுக்காடும், சி மற்றும் டி பிரிவு பணிகளில் 100 விழுக்காடும் கர்நாடக மக்களுக்கே வழங்கப்பட வேண்டும். இந்த சட்டம் பிற மாநிலத்தவருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றாலும் கூட, கர்நாடக மக்களின் வேலை உரிமையை பாதுகாக்கும் என்ற வகையில் வரவேற்கத்தக்கது.

கர்நாடகத்தில் மட்டுமின்றி, இந்தியாவின் பெரும்பான்மையான மாநிலங்களில் இத்தகைய சட்டங்கள் நடைமுறையில் உள்ளன. குஜராத், மராட்டியம் ஆகிய மாநிலங்களில் 80% பணிகளும், ஆந்திரம், ஹரியானா மற்றும் ராஜஸ்தானில் 75% பணிகளும், மத்திய பிரதேசத்தில் 70% பணிகளும் உள்ளூர் மக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. தெலுங்கானத்திலும் இத்தகைய சட்டம் நடைமுறையில் இருக்கிறது. ஆந்திரத்தில் இத்தகைய சட்டம் இயற்றப்பட்டதன் காரணமாக கும்மிடிப்பூண்டியில் இருந்துகூப்பிடுதொலைவில் உள்ள ஸ்ரீசிட்டி தொழில்பேட்டையில் தமிழர்களுக்கு அமைப்பு சார்ந்த வேலைவாய்ப்புகள் மறுக்கப்படுகின்றன. கர்நாடகத்திலும் இத்தகைய சட்டம் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டால், கர்நாடகத்திலும் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பு மறுக்கப்படும். இதனால், அங்குள்ள மென்பொருள்நிறுவனங்களில் தமிழர்களுக்கு இதுவரை கிடைத்து வந்த வேலை வாய்ப்புகள் இனி பறிக்கப்பட்டுவிடும்.

இந்தநிலையைமாற்றி, தமிழக இளைஞர்களுக்குவேலைவாய்ப்பை உறுதி செய்ய வேண்டும் என்றால், தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் குறைந்தது 80% வேலைவாய்ப்புகள் தமிழக இளைஞர்கள் மற்றும் இளம்பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று பல ஆண்டுகளாக பாட்டாளி மக்கள் கட்சி வலியுறுத்தி வருகிறது.

ஆனால், தமிழர்கள் நலன்களைக் காப்பதாகக் கூறி ஆட்சிக்கு வரும் கட்சிகள். இத்தகைய சட்டத்தை இன்று வரை நிறைவேற்றவில்லை.


2021ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலின் போது, தமிழகத்தில் உள்ள தொழில் நிறுவனங்களில் 75% வேலை வாய்ப்புகள் தமிழர்களுக்கே வழங்க, சட்டம் கொண்டு வரப்படும் என்று திமுக வாக்குறுதி அளித்திருந்தது. ஆனால், அதன்பின் 3 ஆண்டுகள் நிறைவடைந்து விட்ட நிலையில், வாக்குறுதியை நிறைவேற்ற திமுக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கான காரணம் என்ன? என்பது தெரியவில்லை.

தமிழ்நாட்டில் உள்ள தனியார்நிறுவனவேலை வாய்ப்புகளை தமிழர்களுக்கு மட்டுமே வழங்க வேண்டும் என்ற சட்டம் இயற்றுவதில் எந்த சிக்கலும் இல்லை; தடையும் இல்லை.

எனவே, இனியும்தயங்காமல் தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகள் மற்றும் தொழில் நிறுவனங்களில் மாதம் ரூ.40,000 வரை ஊதியம் கொண்ட பணிகளில் 80 விழுக்காட்டை தமிழக இளைஞர்கள், இளம் பெண்களுக்கு வழங்குவதை கட்டாயமாக்கி சட்டம் இயற்ற வேண்டும். துணை மானியக் கோரிக்கைகளை தாக்கல் செய்வதற்காக வரும் அக்டோபர் மாவட்டம் கூடவிருக்கும் சட்டப்பேரவை கூட்டத்தொடரிலேயே தனியார்நிறுவனவேலைகளில் தமிழர்களுக்கு 80% இட ஒதுக்கீடு வழங்கும் சட்டத்தை நிறைவேற்ற வேண்டும்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023
19.7.2024

## தீபாவளிக்கு அமரன் ரிலீஸ்




கமல்ஹாசன் பிரமாண்டமாகத் தயாரிக்க, 'ரங்கூன்' ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் சிவகார்த்திகேயன், சாய் பல்லவி நடித்துள்ள படம், 'அமரன்'. ராணுவ மேஜரின் வாழ்க்கையில் நடைபெற்ற முக்கிய சம்பவங்களை மையப்படுத்தி இந்தப் படம் உருவாக்கப்பட்டுள்ளது. ஜி.வி.பிரகாஷ் குமார் இசை அமைக்க, மிகவும் வித்தியாசமான கெட்டப்பில் சிவகார்த்திகேயன் நடித்திருக்கிறார். இப்படம் வரும் அக்டோபர் 31ம் தேதி தீபாவளி பண்டிகையையொட்டி ரிலீஸ் ஆகிறது என்று, படக்குழுவினர் போஸ்டர் மூலம் அறிவித்துள்ளனர்.

## நான் வலுவாக இருக்க காரணம் ஆன்மீகம்: சமந்தா



தற்போது உடல்நிலை தேறியுள்ள சமந்தா, நாள்தோறும் தனது சமூக வலைத்தளங்களில் போட்டோ மற்றும் வீடியோவை வெளியிட்டு சுறுசுறுப்பாக இயங்கி வருகிறார். அவரது உடற்பயிற்சி வீடியோக்கள் இணையதளங்களில் வைரலாகி வருகின்றன. தற்போது இந்திப் படத்திலும், வெப்தொடரிலும் நடிக்கும் சமந்தா, தன் வாழ்க்கையில் ஆன்மீகம்தான் தனக்கு மிகப்பெரிய பலமாகஇருந்துவருவதாகசொல்லியிருக்கிறார்.இதுகுறித்துஅவர்கூறியதாவது:

அவ்வப்போதுவாழ்க்கையில்சிலவிஷயங்களைஅதிரடியாகமாற்றிக்கொள்ள விரும்புகிறோம். நம்பிக்கை மட்டுமே நம்மை முன்னோக்கி அழைத்துச் செல்கிறது. கடந்த 3 வருடங்களில் சில விஷயங்கள் நடந்திருக்கவே கூடாது என்று நினைத்தேன். ஆனால், வாழ்க்கை நம்மீது வீசும் அனைத்தையும் சமாளிக்க வேண்டும் என்று உணர்ந்துள்ளேன். இப்போது நான் வலுவாக இருப்பதற்கு முக்கியமான காரணம் ஆன்மீக ஈடுபாடு. எனது தனிப்பட்ட வளர்ச்சிக்குஆன்மீகம்தான்மிகப்பெரியபலமாகஇருக்கிறது.என்வாழ்க்கையின் அனைத்து விஷயங்களிலும் அதுதான் தாக்கம் செலுத்தி வருகிறது. இன்றைய உலகில் முன்பைவிட ஆன்மீகம் அதிகமாக தேவைப்படுகிறது.


என் வாழ்க்கையில் தொடர்ந்து ஏற்பட்ட பிரச்னைகளால் எனக்கு பல்வேறு நன்மைகள் நடந்துள்ளன. கஷ்டங்கள் வரும்போதுதான் நம்மையும் அறியாமல் புதுப்புது விஷயங்களைக் கற்றுக்கொள்கிறோம். தற்போது நான் புதிதாகப் பல விஷயங்களைக் கற்றுக்கொண்டேன். தற்காப்புக்கலைகள், அம்பு எய்தல், கத்திச்சண்டை, குதிரை ஏற்றம், பாலட் என்று பல விஷயங்களைக் கற்றுக்கொண்டேன். எப்போதும் புதிதாக கற்றுக்கொள்வது என்பது எனக்கு மிகவும் பிடித்த விஷயம். இப்போது எனது வாழ்க்கை சிறப்பாகச் சென்று கொண்டிருக்கிறது.

## நிர்வாண பார்ட்டியில் இருந்து தலைதெறிக்க ஓடிவந்த நடிகை: பேர்லின் பாரில் பரபரப்பு சம்பவம்

பாலிவுட் இயக்குனர் சேகர் கபூரை காதல் திருமணம் செய்தவர் சுசித்ரா (50). அவர்களுக்கு காவேரி கபூர் என்ற மகள் இருக்கிறார். சேகர் கபூரும், சுசித்ராவும் விவாகரத்து மூலம் பிரிந்துவிட்டனர். சுசித்ராவின் அக்கா, மறைந்த பாலிவுட் நடிகை சுஜாதா குமார். இந்த நிலையில், ஜெர்மனி பெர்லின் நகரில், பிரபல பார் ஒன்றில் நடந்த நிர்வாண பார்ட்டியில் கலந்துகொண்டது குறித்து நடிகையும், பாடகியுமான சுசித்ரா கிருஷ்ணமூர்த்தி எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்தி, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிப் படங்களில் நடித்தவர் சுசித்ரா கிருஷ்ணமூர்த்தி. தமிழ், இந்தி டி.வி தொடர்களிலும் நடித்துள்ள அவர் ஒரு பாடகியும் கூட. சமீபத்தில் அவர் ஜெர்மனிக்குச் சென்று இருந்தபோது நடந்த ஒரு சம்பவம் குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார். அவர் கூறும்போது, 'பெர்லினில் பாடி பாசிட்டிவிட்டி என்ற நிர்வாண பார்ட்டிக்குச் சென்றேன். இதுபோன்ற பார்ட்டி எல்லாம் ஜெர்மனியில் சர்வசாதாரணம். பாடி பாசிட்டிவிட்டியை ஊக்குவிப்பதே இந்த பார்ட்டிகளின் நோக்கமாகும்.

சரி, நாமும் போய் பார்க்கலாம் என்று நினைத்தேன். என் தோழிக்கு தெரிந்தவருக்கு சொந்தமான பாரில் அந்த பார்ட்டி நடந்தது. விருந்தாளிகள் பட்டியலில் என் பெயரையும் சேர்த்திருந்தனர். ஆனால், பார்ட்டிக்குச் சென்ற வேகத்தில் தலைதெறிக்க ஓடி வந்துவிட்டேன். எனக்கு யாருடைய உடலையும் பார்க்க விருப்பம் இல்லை. ஒரு நல்ல எண்ணத்தில்தான் அந்த பார்ட்டியை நடத்தினர். அது மோசமான பார்ட்டி இல்லை. ஆனால், இந்திய ரான நம்மால் அப்படிச் செய்ய முடியாது. இரவு முழுவதும் நடந்த அந்த பார்ட்டியில், நான் 20 நிமிடங்கள்தான் இருந்தேன்.



இது அனைவரும் கலந்துகொள்ளும் பார்ட்டி இல்லை. அழைக்கப்பட்டவர்கள் மட்டும் கலந்து கொள்ளும் பார்ட்டி. நான் அந்த பார்ட்டிக்குச் சென்றது எனது மகளுக்கு தெரியாது. ஆனால், தெரியவந்தாலும் அதை அவர் பெரிதாக எடுத்துக்கொள்ள மாட்டார். அவர் எனக்கு நேரெதிர். அதனால் நான் இப்படியொரு பார்ட்டிக்குச் சென்றது தெரியவந்தால் சந்தோஷப்படுவார். 20 நிமிடங்களில் ஓடி வந்துவிட்டாலும், அங்கு போயிருந்தேன் அல்லவா? பெர்லின் ரொம்ப சூடாக இருக்கிறது. கோடையில் இதுபோன்ற நிர்வாண பார்ட்டி நடத்துவது என்பது சாதாரணம்' என்றார். இந்தப் பதிவு வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## சதுர்' படத்தில் 1250 விஎஃப்எக்ஸ் காட்சிகள்




அமர் ரமேஷ், அஜித் விக்னேஷ், தாமோதரன், செல்லா, 'ஜீவா' ரவி, சூர்யா, அர்னவ் ஹரிஜா, பிரதீப் அரி, கிரிஷ் பாலா, ஜெகன் கிரிஷ், 'பாய்ஸ்' ராஜன், ராஜன் கிருஷ்ணமூர்த்தி நடித்துள்ள படம், 'சதுர்'. இந்தப் படத்தை அகஸ்டின் பிரபு எழுதி இயக்கி, விஎஃப்எக்ஸ் பணி மேற்கொண்டுள்ளார். ராக்ஸ் நேச்சர் எண்டர்டெயின்மெண்ட் சார்பில் ராம் மணிகண்டன் தயாரித்துள்ளார். ராம் டி.சந்தர் ஒளிப்பதிவு செய்ய, ஆதர்ஷ் இசை அமைத்துள்ளார். இப்படத்தின் டிரைலரை தயாரிப்பாளர் ஜி.தனஞ்செயன் வெளியிட்டார். அப்போது அகஸ்டின் பிரபு பேசியதாவது:

இப்படத்தில் 1,250 விஎஃப்எக்ஸ் ஷாட்டுகள் இருக்கிறது. தயாரிப்பாளரிடம் இந்தக் கதையைச் சொல்லி, தியேட்டருக்கு வரும் ரசிகர்களுக்கு ஒரு புதுமையான அனுபவத்தைக் கொடுக்க வேண்டும் என்றேன். பிறகு பைலட் படத்தை உருவாக்கிக் காட்டினேன். உடனே அவர் என்னை முழுமையாக நம்பினார். கடலுக்குள் நடக்கும் காட்சி மற்றும் கார் சேஸ், பிளைட் பைட், ஹிஸ்டாரிக்கல் காட்சிகள் உள்பட பிரமிக்கத்தக்க காட்சிகள் நிறைய இருக்கிறது. சுமார் 5,000 வருடங்களுக்கு முன்பு கதை தொடங்குகிறது. 1945, 1967 ஆகிய காலக்கட்டங்களில் நடந்து, இறுதியில் இன்றைய வருடத்தில் முடிகிறது. அனைத்து ரசிகர்களுக்கும் 'சதுர்' படம் புதிய அனுபவமாக இருக்கும். அடுத்த மாதம் படத்தை வெளியிட திட்டமிட்டுள்ளோம்.

## தியேட்டரை விட்டுவிட்டு ஓடிடிக்கு மாறிவிட்டார்கள்: ரசிகர்கள் பற்றி தமன்னா

இந்தியாவிலுள்ள பல்வேறு மொழிகளில் ஏராளமான படங்களில் நடித்துள்ள தமன்னா, தற்போது வெப்தொடர்களில் கவர்ச்சியாக நடித்து அசத்தி வருகிறார். இந்நிலையில் அவர் அளித்த பேட்டியில், இன்றைய ரசிகர்களின் மனநிலை குறித்து வெளிப்படையாகப் பேசியுள்ளார். அவரது கருத்துகள் இணையதளங்கள் முழுக்க வைரலாகி வருகிறது. அவர் கூறியதாவது: சிறுவயதில் இருந்து, பிற்காலத்தில் நான் ஒரு புகழ்பெற்ற சினிமா நடிகையாக வேண்டும் என்ற கனவு இருந்தது. அதை எப்படியாவது நிறைவேற்றியாக வேண்டும் என்று, தொடர்ச்சியாக எனது ஒவ்வொரு முடிவும் அமைந்தது. அதுவே இப்போது என்னை இதுபோன்ற உயரிய நிலைக்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறது.

நான் விரும்பியபடி திரைத்துறையில் காலடி எடுத்து வைத்ததும், எதிர்பாராத சவால்களைச் சந்திக்க வேண்டியிருந்தது. எனினும், வெற்றிகரமான ஒரு நடிகையாக நீடிக்க வேண்டும் என்பதில் என் மனம் மிகவும் உறுதியாக இருந்தது. அதற்காக 100 சதவீதம் கடுமையாக உழைத்தேன். இப்போது, அன்று மனதில் நினைத்ததை மிகப்பெரிய அளவில் சாதித்துவிட்டேன். எனவே, நான் மிகவும் மகிழ்ச்சியுடன் இருக்கிறேன். ஒருகாலத்தில் தியேட்டர்களில் மட்டுமே ரசிகர் கள் படம் பார்த்து ரசித்தனர். இப்போது காலம் மாறிவிட்டது.

ஓடிடி தளங்களில் நிறைய படங்களுக்கு ரசிகர்கள் மத்தியில் அதிக வரவேற்பு கிடைத்து வருகிறது. அதுமட்டுமன்றி, சமூக வலைத்தளங்களில் 15 நொடி வரை ஓடக்கூடிய ரீல்ஸ்களை ரசித்துப் பார்த்து மக்கள் பொழுதுபோக்கி வருகின்றனர். அப்படி ரீல்ஸ் பார்த்து ரசிக்கும் மக்களைக் கவர்ந்திழுப்பது என்பது இன்றுள்ள நடிகர், நடிகை களுக்கு பெரிய சவாலாக இருந்து வருகிறது. அவர்களுக்கு மிகவும் பிடித்த கதைகளை மட்டுமே தேர்வு செய்து நடிக்க வேண்டியிருக்கிறது. ரீல்ஸ்கள், எங்களைப் போன்ற நடிகைகளுக்கு மிகப்பெரிய போட்டியாக மாறியிருக்கிறது.

## மாரி செல்வராஜ் இயக்கியுள்ள 'வாழை' படத்தின் புதிய அப்டேட்




கடந்த 2018ம் ஆண்டு வெளியான 'பரியேறும் பெருமாள்' திரைப்படம் மூலம் தமிழ்சினிமாவில் இயக்குனராக அறிமுகமானவர் மாரி செல்வராஜ். இந்த திரைப்படம் மிகுந்த பாராட்டை பெற்றது. இதையடுத்து, தனுஷ் நடித்த 'கர்ணன்', உதயநிதி ஸ்டாலின் நடித்த 'மாமன்னன்' உள்ளிட்ட படங்களை மாரி செல்வராஜ் இயக்கினார். இதைத் தொடர்ந்து மாரி செல்வராஜ் இயக்கியுள்ள திரைப்படம் 'வாழை'. இந்த படத்தில் நடிகர் கலையரசன் கதாநாயகனாக நடித்துள்ளார். மேலும் நிகிலா விமல், திவ்யா துரைசாமி, 'வெயில்' படம் மூலம் பிரபலமான பிரியங்கா மற்றும் சில சிறுவர்களும் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு சந்தோஷ் நாராயணன் இசையமைத்துள்ளார். 'வாழை' திரைப்படம் ஆகஸ்ட் மாதம் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் இந்த படத்தின் முதல் பாடல் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதன்படி, 'வாழை' படத்தின் முதல் பாடல் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மாரி செல்வராஜ் தற்போது துருவ் விக்ரமை வைத்து 'பைசன்' படத்தை இயக்கி வருகிறார்.

## இலங்கை தொடரில் ஹார்திக் கேப்டன்?



இந்திய அணி இந்த மாதம் இலங்கையில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 டி20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாட உள்ளது.

ரோகித் சர்மா டி20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற்றதால் டி20 அணிக்கு ஆல் ரவுண்டர் ஹார்திக் பாண்டியா கேப்டனாக நியமிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில் டி20தொடரில் மட்டும் பங்கேற்கும் ஹார்திக் ஒருநாள் தொடரில் விளையாட மாட்டார் எனவும் தகவல் வெளியாகி உள்ளது.

## லா பிளாக்னே செஸ், இனியனுக்கு வெண்கலம்



பிரான்ஸின் லா பிளாக்னே நகரில் நடந்த லா பிளாக்னே ஓபன் சர்வதேச செஸ் போட்டியில் (ஜூலை 612) இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர் இனியன் பன்னீர்செல்வம் வெண்கலப் பதக்கம் வென்றார்.

இந்த தொடரில் 17 கிராண்ட் மாஸ்டர்கள், 40 சர்வதேச மாஸ்டர்கள் உட்பட 17 நாடுகளை சார்ந்த 184 வீரர்கள் பங்கேற்றனர். 9 சுற்றுகளாக நடைபெற்ற இப்போட்டியில், இனியன் 6 வெற்றி, 2 டிரா 1 தோல்வி என 7 புள்ளிகளுடன் 2ம் இடத்தை பகிர்ந்துகொண்டார்.

இதைத் தொடர்ந்து, டை பிரேக்கர் கடைப்பிடிக்கப்பட்டதில் 3வது இடம் பிடித்து வெண்கலம் வென்றார். சக இந்திய கிராண்ட் மாஸ்டர் ராஜா ரித்விக் 2ம் இடம் பிடித்து வெள்ளிப் பதக்கம் பெற்றார். பிரான்ஸ் கிராண்ட் மாஸ்டர் ஜூல்ஸ் முஸ்ஸார்ட் (7.5) தங்கப் பதக்கத்தை கைப்பற்றினார்.

## இங்கிலாந்து பயிற்சியாளர் சவுத்கேட் ராஜினாமா



இங்கிலாந்து கால்பந்து அணி பயிற்சியாளர் கேரத் சவுத்கேட் பதவி விலகியுள்ளார். யூரோ கோப்பை கால்பந்து போட்டித் தொடரின் பைனலுக்கு முன்னேறிய இங்கிலாந்து அணி, பரபரப்பான இறுதிப் போட்டியில் 12 என்ற கோல் கணக்கில் ஸ்பெயின் அணியிடம் தோற்று 2வது இடம் பிடித்தது. இதைத் தொடர்ந்து, இங்கிலாந்து அணியின் தலைமை பயிற்சியாளர் கேரத் சவுத்கேட் (53 வயது) தனது பதவியை ராஜினாமா செய்வதாக நேற்று அறிவித்துள்ளார்.

2016ம் ஆண்டு பயிற்சியாளர் பொறுப்பேற்ற சவுத்கேட், 102 சர்வதேச போட்டிகளில் இங்கிலாந்து அணியை வழிநடத்தி உள்ளார். அவரது பயிற்சியின்கீழ் 2018 ஃபிபா உலக கோப்பை தொடரின் அரையிறுதிக்கும், 2022ல் காலிறுதிக்கும் முன்னேறிய இங்கிலாந்து, யூரோ கோப்பையில் 2021 மற்றும் 2024ல் பைனலுக்கு தகுதி பெற்றது.

## சுப்மன் கில் அதுக்கு சரிப்பட்டு வரமாட்டார்!: அமித் மிஸ்ரா



ரோகித்சர்மா தலைமையிலான இந்திய அணி டி20 உலககோப்பையை வென்று நாடு திரும்பிய நேரத்தில், சுப்மன் கில் தலைமையில் இன்னொரு டி20 அணி ஜிம்பாப்வே சென்றது. முதல் முறையாக கேப்டன் பொறுப்பு, இளம், அறிமுக வீரர்களுடன் சென்ற இந்தியா முதல் ஆட்டத்தில் தோற்றது. அதனால் உலக கோப்பையில் கிடைத்த தொடர் வெற்றி முடிவுக்கு வந்தது. கூடவே விமர்சனங்களும் வந்தன. ஆனாலும் சுப்மன் தலைமையிலான இளம் இந்தியா அடுத்த 4 ஆட்டங்களிலும் தொடர்ச்சியாக வென்று தொடரை 41 என கைப்பற்றியது. இந்நிலையில், கேப்டனாக கில் செயல்பாடு குறித்து முன்னாள் ஸ்பின்னர் அமித் மிஸ்ரா நேற்று கூறியதாவது: ஐபிஎல் தொடரில் சுப்மன் எப்படி கேப்டனாக செயல்பட்டார் என்று பார்த்தோம். அவரிடம் கேப்டனுக்கான யோசனைகள் இல்லை. ஐபிஎல் தொடர்களிலும், இந்தியாவுக்காகவும் ஒரு வீரராக சிறப்பாக பங்களிக்கிறார். ஆனால் கேப்டனாக அந்த அளவுக்கு இல்லை. வருங்காலத்தை கருத்தில் கொண்டு அவருக்கு கேப்டன் அனுபவம் வரவேண்டும் என்பதற்காக இந்த முயற்சியாக இருக்கலாம். என்னைப் பொருத்தவரையில் டி20 அணிக்கு கேப்டனாக சஞ்சு சாம்சனை நியமிக்கலாம். இல்லாவிட்டால் ரிஷப் பன்ட், ருதுராஜ் கெய்க்வாட் ஆகியோர் பொருத்தமானவர்கள். ராகுல் டிராவிட் ஆதரவினால்தான் சுப்மன் கேப்டன் ஆனாரா என்பது எனக்கு தெரியாது. ஒவ்வொருவருக்கும் யாரையாவது பிடிக்கத்தான் செய்யும். அதனால் நான் சுப்மனை வெறுப்பவன் அல்ல. அவரை எனக்கு பிடிக்கும். நான் சொல்வது கேப்டன் பதவிக்கு மட்டும்தான். ஐபிஎல் தொடரில் ருதுராஜ் கேப்டன் பதவியை கையாண்ட விதம் நன்றாக இருந்தது. அதனால்தான் சுப்மனுக்கு பதில் இவர்களை கேப்டனாக நியமிக்கலாம் என்று சொல்கிறேன். இவ்வாறு அமித் மிஸ்ரா கூறியுள்ளார்.

## தன்னையும், சச்சினையும் விட பேட்டிங்கில் அதிக திறமை பெற்றவர் கார்ல் ஹூப்பர்: மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் வீரர் பிரையன் லாரா



மேற்கிந்திய தீவுகள் அணியின் முன்னாள் வீரர் பிரையன் லாரா, தன்னையும் இந்திய கிரிக்கெட் ஐகான் சச்சின் டெண்டுல்கரையும் விட தனது முன்னாள் சக வீரர் கார்ல் ஹூப்பர் ஒரு பேட்டிங்கில் அதிக திறமை பெற்றவர் என்று நம்புவதாக தெரிவித்துள்ளார். ஹூப்பர் குறிப்பாக ஒரு கேப்டனாக அவரது ஈர்க்கக்கூடிய செயல்திறன் மற்றும் குறிப்பிடத்தக்க போட்டிகளில் அவரது முக்கிய பங்கை பிரையன் லாரா எடுத்துக் கூறினார்.

"கார்ல் ஹூப்பர் நான் பார்த்த சிறந்த வீரர்களில் ஒருவராக இருந்தார். டெண்டுல்கரும் நானும் கூட அந்த திறமையை நெருங்க முடியாது என்று நான் கூறுவேன். கேப்டனாக விளையாடுவதில் இருந்து தனித்தனியான வாழ்க்கை, மற்றும் அவரது எண்ணிக்கைகள் மிகவும் வித்தியாசமானது. ஒரு கேப்டனாக, அவர் சராசரியாக 50க்கு அருகில் இருந்தார். ஒரு கேப்டனாக மட்டுமே அவர் தனது உண்மையான திறனை நிறைவேற்றியது வருத்தமளிக்கிறது" என லாரா தெரிவித்துள்ளார்.

மேலும் ஜூன் 1991 இல் லார்ட்ஸில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் டிரா செய்த ஹூப்பரின் முக்கிய பங்கை லாரா நினைவுபடுத்தினார். "நான் அந்த லார்ட்ஸ் போட்டியை நினைத்துப் பார்க்கும்போது, கார்ல் ஹூப்பரின் வகுப்பைப் பார்க்கிறேன். அவர் பேட் செய்யும் எளிமை எங்கள் அனைவரிடமும், மூத்த வீரர்கள் கூட ஒருவித பிரமிப்பை ஏற்படுத்தியது. நீங்கள் அதை எப்போது உணர்ந்தீர்கள்? கார்ல் பேட்டிங் செய்ய வெளியே சென்றார், அவர்கள் அதை ரசித்தார்கள் – ஹெய்ன்ஸ், ரிச்சர்ட்ஸ், க்ரீனிட்ஜ், இவர்கள் அனைவரும் அவரைப் பார்ப்பதற்காக அவர்கள் செய்வதை நிறுத்திவிடுவார்கள்" என்று லாரா பகிர்ந்து கொண்டார்.

## ரியல் மாட்ரிட் அணியில் எம்பாப்பே



பிரான்ஸ்கால்பந்துஅணிகேப்டன்கிளியன்எம்பாப்பே (25) அந்த நாட்டில் உள்ள பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் (பிஎஸ்ஜி) அணிக்காக விளையாடி வருகிறார். அந்த அணிக்காக 2018 முதல் விளையாடி வந்த எம்பாப்பே 2023ம் ஆண்டே அணி மாறப்போகிறார் என்ற பேச்சு எழுந்தது. ஆனால் அந்த சீசனை பிஎஸ்ஜி அணிக்காக விளையாடியர், இப்போது அடுத்த சீசனுக்கு ஸ்பெயினின் ரியல் மாட்ரிட் அணியில் நேற்று முறைப்படி இணைந்துள்ளார்.

அங்குள்ள சாண்டியாகோ அரங்கில் ரசிகர்கள் முன்னால் பேசிய எம்பாப்பே, 'இது எனக்கு நம்ப முடியாத நாள். நான் சிறுவயதில் இருந்தே மாட்ரிட் அணிக்காக விளையாட வேண்டும் என்று கனவு கண்டேன். இன்று நான் இங்கு நின்று கொண்டு இருக்கிறேன். இது அர்த்தம் உள்ள நாள்' என்றார். பிஎஸ்ஜி அணியில் நட்சத்திர வீரருக்காக 10ம் எண் சீருடை அணிந்து விளையாடிய எம்பாப்பே, மாட்ரிட் அணிக்காக 9ம் எண் சீருடை அணிந்து விளையாட இருக்கிறார்.



**தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றுந்**
**துன்னற்க தீவினைப் பால்**

**விளக்கம்:**

**ஒருவன் தன்னைத் தான் விரும்பி வாழ்பவனாயின், தீய செயலாகிய பகுதியை எவ்வளவு சிறியதாயினும் பொருந்தாமல் நீங்க வேண்டும்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com
Canara Bank Account : 120028528266
IFSC code : CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.